## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.45/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விநாயகம் | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : தரணிவராகபுரம் |
| தொழில் | : ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**03.09.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. வழக்கு சொத்து கலீல் என்பவருக்கு சொந்தம் என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன ஆவணம் உள்ளது என்றால் அவர் பெயரில் பட்டா வந்து அந்த பட்டா என் பெயருக்கு வந்துள்ளது. கலீல் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனிமேல்தான் தாக்கல் செய்ய வேண்டும். கலீல் சொத்தை யாரிடமிருந்து வாங்கினார் என்றால் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஏலத்திற்கு எடுத்து அவர் பெயருக்கு வந்தது. அந்த ஏல ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கலீல் பெயரில் உள்ள ஆவணமோ ஏல ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. நான் சொல்வது செங்கல்பட்டு நீதிமன்றமா காஞ்சிபுரம் நீதிமன்றமா என்றால் செங்கல்பட்டு நீதிமன்றம்தான். நான் சொல்வதுபோல் செங்கல்பட்டு நீதிமன்றத்திலோ காஞ்சிபுரம் நீதிமன்றத்திலோ அவ்வாறு வழக்கு சொத்து ஏலத்தில் வந்ததாக சொல்வதும் கலீல் ஏலத்தில் எடுத்ததாக சொல்வதும் நான்

கிரையம் வாங்கியதாக சொல்வதும் உண்மையானது இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போது சொல்லும் விவரங்களை எனது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்கு சொத்திற்கும் கலீலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நானும் கலீலும் சேர்ந்து பொய்யாக ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. சிவலிங்கம், சுப்பிரமணி யார் என்றால் சுப்பிரமணிய ரெட்டி என்பவர் ஆஞ்சிநேய ரெட்டியின் மாமனார் ஆவார். சிவலிங்கம் என் அப்பாவுடன் பிறந்தவர் ஆவார்.

9. சிவலிங்கம், சஞ்சீவி ரெட்டி பாகத்திற்கு வழக்கு சொத்து வந்தது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தாகும். சஞ்சீவியின் மனைவி காமாட்சி என்றால் ஆமாம். காமாட்சியும் சிவலிங்கமும் வழக்கு சொத்தை ஆஞ்சிநேய ரெட்டிக்கு 1986ல் கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் 1985ல் கிரையம் வாங்கியுள்ளேன். ஆஞ்சிநேய ரெட்டி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆஞ்சிநேய ரெட்டி 1986 முதல் 1995 வரை அனுபவித்து வந்து அதன் பிறகு வழக்கு சொத்தை சேகர், சித்ரகுமார் ஆகியோருக்கு 1995ல் கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 30 வருடங்களாக 6, 7 பிரதிவாதிகள்தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

10. மேற்படி ஆவணம் 30 வருடங்களுக்கு மேல் பழமையானது என்பதால் அதை ஆட்சேபணை செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் தற்போது முள்மரங்கள்தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த முள்மரங்களையும் 6, 7 பிரதிவாதிகள்தான் வெட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான்தான் வெட்டி வருகிறேன். அலமேலுமங்காபுரத்தை சேர்ந்த முருகன் என்பவருக்கும் மதுரையை சேர்ந்த ராமமூர்த்தி என்பவருக்கும் அந்த மரங்களை சூலை போடுவதற்காக விற்பனை செய்துள்ளனர் என்றால் இல்லை. 6, 7 பிரதிவாதிகள்தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் கலீலுக்கே உரிமை இல்லாத நிலையில் அவரிடமிருந்து கிரையம் பெற்ற எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)